செ.வெ.எண்:07 நாள்: 03.10.2020

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராக கொண்டு இயங்கி வரும், அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் சமூகப்பணியாளர் - 1 பணியிடம் மற்றும் புறத்தொடர்பு பணியாளர் - 1 பணியிடம் என மொத்தம் இரண்டு பணியிடங்கள் காலியாக உள்ளது. இப்பணியிடங்களினை 1 வருட கால ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் அரியலூர் மாவட்டத்தை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சமூகப்பணியாளர் - 1 பணியிடம் - கல்வி தகுதி:** பட்டதாரி / முதுகலை பட்டதாரிகள் (10+2+3 Pattern) மேலும் உளவியல் / சமூகப்பணி / சமூகவியல் / வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **வயது வரம்பு:** 40 வயது (01.06.2020) மிகாமல் இருத்தல் வேண்டும். **முன் அனுபவம்:** குழந்தைகள் சார்ந்த பணியில் 2 ஆண்டுகள். **தொகுப்பூதியம்:** ரூ.14,000/- (ஒரு மாதத்திற்கு)

**புறத்தொடர்பு பணியாளர் - 1 பணியிடம் - கல்வி தகுதி:** 10ம் வகுப்பு அல்லது 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் குழந்தைகள் சார்ந்த படிப்பு பிரிவில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். **வயது வரம்பு:** 40 வயது (01.06.2020) மிகாமல் இருத்தல் வேண்டும். **முன் அனுபவம்:** குழந்தைகள் சார்ந்த பணியில் 1 ஆண்டு. தொகுப்பூதியம்: ரூ.8,000/- (ஒரு மாதத்திற்கு)

விண்ணப்ப படிவத்தினை ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்தினை 17.10.2020 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர் - 621704 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**